**சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை**
**முன்னிலை : திரு. வ. இராமலிங்கம், பி.எஸ்.சி., பி.எல்.,**
**சார்பு நீதிபதி, அருப்புக்கோட்டை**
**2023 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 16 ஆம் நாள் வியாழக்கிழமை**

**வ.வி.எண்.4/2023 இன் அ.வ.எண்.57/2018**

க. வைரமணி ... மனுதாரர்/வாதி

/எதிர்/

1. லெ.மோகன்
2. லெ. அழகர்சாமி
3. செல்வி
4. விஜயா
5. ராஜாத்தி
6. அ. அழகர்சாமி
7. அ. சீனிவாசன்
8. ராஜம்மாள்
9. பூபதி
10. சி. அழகுமலைமூப்பர்
11. எஸ்.மாசிலாமணி ... 1 முதல் 11 எதிர்மனுதாரர்கள்/ 1 முதல் 11 பிரதிவாதிகள்
12. சோபனாதேவி ... 12 ம் எதிர்மனுதாரர்/ சேர்க்கப்படவேண்டிய 12 ம் பிரதிவாதி

இம்மனுவானது இந்நீதின்றம் முன்பாக இறுதியான விசாரணைக்காக 18.10.2023 அன்று வந்தபோது மனுதாரர்தரப்பில் வழக்கறிஞர் திரு.ஏ.ஆனந்தன் அவர்கள் ஆஜரான நிலையிலும் 12 ம் எதிர்மனுதாரர்தரப்பில் வழக்கறிஞர் திரு.எம்.பாலமுருகன் அவர்கள் ஆஜராகியுள்ள நிலையிலும், 11 ம் எதிர்மனுதாரர்தரப்பில் வழக்கறிஞர் திரு.என்.சோலைராஜ் அவர்கள் ஆஜராகியுள்ள நிலையிலும் 1 முதல் 10 எதிர்மனுதாரர்கள் அசல் வழக்கில் தோன்றாத்தரப்பினர்களாக ஆகியுள்ள நிலையிலும் இருதரப்பும் கேட்கப்பட்டும் ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டும் இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**உத்தரவு**

1. இம்மனுவானது 12 ம் எதிர்மனுதாரரை அசல் வழக்கில் 12 ம் பிரதிவாதியாக சேர்த்துக்கொண்டு வழக்கை மேல்நடத்த அனுமதிகோரி கட்டளை 1 விதி 10(2) மற்றும் பிரிவு 151 சிபிசி படி மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. <u>மனுவின் சுருக்கம்:–</u>

வழக்குச் சொத்தானது மனுதாரர்/வாதியின் தந்தையான சி.அழகுமலைமூப்பர் வழி பூர்வீக சொத்துக்கள் ஆகும். வழக்குச் சொத்தை 11ம் பிரதிவாதி 12ம் எதிர்மனுதாரருக்கு கடந்த 27.09.2021ம் தேதி ஆவண எண்.2171/2021 ஆவணப்படி கிரையம் எழுதிக் கொடுத்துவிட்டார். 12ம் எதிர்மனுதாரர் கிரையம் பெற்ற வழக்குச் சொத்து சம்பந்தமாக அசல் வழக்கு நிலுவையில் உள்ளபோது கிரையம் பெற்றது சட்டப்படி ஏற்புடையது அல்ல. மேற்படி கிரைய ஆவண எண்.2171/2021 ஆவணமானது ஒரு Shame and Nominal ஆகும். எனவே மேற்படி கிரையம் மூலம் 12ம் எதிர்மனுதாரருக்கு எந்தவித உரிமை மாற்றமும் ஏற்படவில்லை. மேற்படி கிரையம் சட்டப்படி செல்லாது. அது வாதியைக் கட்டுப்படுத்தக்கூடியதல்ல. மேற்படி கிரையம் பெற்ற 12ம் எதிர்மனுதாரரரை அசல் வழக்கில் அவசிய தரப்பினராக சேர்க்க வேண்டியது அவசியமாக உள்ளது. 12ம் எதிர்மனுதாரரை அசல் வழக்கில் 12ம் பிரதிவாதியாக சேர்த்துக் கொண்டு வழக்கை மேல்நடத்த அனுமதி கோரி மனுதாரர்/வாதி இம்மனுவைத் தாக்கல் செய்துள்ளார்.

3. <u>12ம் எதிர்மனுதாரர்கள்தரப்பு மறுப்புரையின் சுருக்கம்:–</u>

12ம் எதிர்மனுதாரர் தாவாச் சொத்தினை 11ம் பிரதிவாதியான மாசிலாமணி என்பவரிடமிருந்து கடந்த 27.09.2021ம் தேதியிட்ட பதிவு செய்யப்பட்ட கிரைய பத்திரப்படி சரியான பிரதிபிரயோசனத்திற்கு கிரையம் பெற்றுள்ளார். 12ம் எதிர்மனுதாரர் நல்லெண்ணத்தின் அடிப்படையில் கிரையம் பெற்ற கிரையதாரர் ஆவார். 12ம் எதிர்மனுதாரர் வழக்குச் சொத்தினை நல்லெண்ணத்தின் அடிப்படையில் ஆவணங் களை முழுமையாக சரிபார்த்து சரியான பிரதிபிரயோஜனத்திற்கு கிரையம் பெற்றுள்ளார். 12ம் எதிர்மனுதாரர் பெற்ற கிரையம் சட்டப்படி சரியானது. 12ம் எதிர்மனுதாரர் இந்த வழக்கிற்கு அவசியமற்ற தரப்பினர் ஆவார். எனவே இம்மனுவை 12ம் எதிர்மனுதாரரின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவிடவேண்டும்.

4. இம்மனுவில் தீர்க்கப்படவேண்டிய பிரச்சினை என்னவெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

5. <u>தீர்வு:–</u>

மனுதாரர்தரப்பில், வழக்குச் சொத்தானது மனுதாரர்/வாதியின் தந்தைக்கு பூர்வீக

சொத்துக்கள் என்றும் வழக்குச் சொத்தை 11ம் பிரதிவாதி 12ம் எதிர்மனுதாரருக்கு கடந்த 27.09.2021ம் தேதி ஆவண எண்.2171/2021 ஆவணப்படி கிரையம் எழுதிக் கொடுத்துவிட்டதாகவும் 12ம் எதிர்மனுதாரர் கிரையம் பெற்ற வழக்குச் சொத்து சம்பந்தமாக அசல் வழக்கு நிலுவையில் உள்ளபோது கிரையம் பெற்றது சட்டப்படி ஏற்புடையது அல்ல என்றும் அது வாதியைக் கட்டுப்படுத்தக்கூடியதல்ல என்றும் எனவே மேற்படி கிரையம் பெற்ற 12ம் எதிர்மனுதாரரரை அசல் வழக்கில் அவசிய தரப்பினராக சேர்க்க வேண்டியது அவசியமாக உள்ளது என்றும் கூறப்பட்டுள்ளது.

6. 12ம் எதிர்மனுதாரர்தரப்பில், 12ம் எதிர்மனுதாரர் தாவாச் சொத்தினை 11ம் பிரதிவாதியான மாசிலாமணி என்பவரிடமிருந்து கடந்த 27.09.2021ம் தேதியிட்ட பதிவு செய்யப்பட்ட கிரைய பத்திரப்படி சரியான பிரதிபிரயோசனத்திற்கு கிரையம் பெற்றுள்ள தாகவும் 12ம் எதிர்மனுதாரர் பெற்ற கிரையம் சட்டப்படி சரியானது என்றும் 12ம் எதிர் மனுதாரர் இந்த வழக்கிற்கு அவசியமற்ற தரப்பினர் என்றும் கூறப்பட்டுள்ளது.

7. இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது. மனுதாரர்தரப்பில், வழக்குச் சொத்தினை 12ம் எதிர்மனுதாரர் 11ம் பிரதிவாதியிடமிருந்து வழக்கு நிலுவையில் உள்ளபோது கிரையம் பெற்றுள்ளதாகவும் எனவே 12ம் எதிர்மனுதாரர் அசல் வழக்கிற்கு அவசியமான தரப்பினர் என்றும் கூறப்பட்டுள்ள நிலையில், எதிர்மனுதாரர்தரப்பில் 11ம் பிரதிவாதியிடமிருந்து 12ம் எதிர்மனுதாரர் சரியான பிரதிபிரயோசனத்திற்கு வழக்குச் சொத்தை கிரையம் பெற்றுள்ளதாகவும் 12ம் எதிர்மனுதாரர் பெற்ற கிரையம் நல்லெண்ணத்தின்பால் பெற்ற கிரையம் என்றும் கூறப்பட்டிருந்தாலும் 12ம் எதிர்மனுதாரர்தரப்பில் வழக்குச் சொத்தினை 11ம் பிரதிவாதியிடமிருந்து கிரையம் பெற்றுள்ளது ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. எனவே வழக்குச் சொத்தை, வழக்கு நிலுவையில் உள்ளபோது, 12ம் எதிர்மனுதாரர் 11ம் பிரதிவாதியிடமிருந்து கிரையம் பெற்றுள்ள நிலையில், 12ம் எதிர்மனுதாரரை அசல் வழக்கில் தரப்பினராக சேர்த்தால் தான் வழக்குச் சொத்து குறித்து சரியான தீர்வு காண இயலும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும் 12ம் எதிர்மனுதாரர்தரப்பில், 12ம் எதிர்மனுதாரர் பெற்ற கிரையம் நல்லெண்ணத்தின்பால் பெற்ற கிரையம் என்பதால் 12ம் எதிர்மனுதாரர் அவசியமற்ற தரப்பினர் என்று கூறப்பட்டாலும், வழக்குச் சொத்தை 12ம் எதிர்மனுதாரர் கிரையம் பெற்றுள்ள நிலையில், அசல் வழக்கில், இருதரப்பிலும் சாட்சிகள் விசாரணை

செய்யப்பட்டு, சான்றாவணங்கள் தாக்கல் செய்யப்பட்டு, இருதரப்பு வாதுரை மற்றும் சாட்சிய சான்றாவணங்களின் அடிப்படையிலேயே 12ம் எதிர்மனுதாரர் அசல் வழக்கிற்கு அவசியமான தரப்பினரா? அவசியமற்ற தரப்பினரா? என்று தீர்மானிக்க இயலும்.

8. மனுதாரர்தரப்பில், 12ம் எதிர்மனுதாரர், வழக்குச் சொத்தை 11ம் எதிர்மனு தாரரிடமிருந்து கிரையம் பெற்றுள்ளதாகக் கூறப்பட்டு, அது 12ம் எதிர்மனுதாரர் தரப்பிலும் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ள நிலையில் அசல் வழக்கிற்கு 12ம் எதிர்மனுதாரர் அவசியமான தரப்பினர் என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது. 12ம் எதிர்மனுதாரர் தரப்பில், மனுதாரரின் மனுவினை மறுத்து ஆட்சேபணை தெரிவித்திருந்தாலும், இம்மனுவினை அனுமதிப்பதால், 12ம் எதிர்மனுதாரருக்கு எந்த வகையில் பாதிப்பு ஏற்படும் என்பது குறித்து குறிப்பிட்டு எதிர்வாதம் செய்யப்படவில்லை. மேலும் எதிர்மனுதாரர்தரப்பில் இம்மனுவினை அனுமதிக்க வேறு கடுமையான ஆட்சேபணை எதுவும் மறுப்புரையில் கூறப்படவில்லை. எனவே மேற்கூறப்பட்ட காரணங்களின் அடிப்படையிலும் மனுவின் தன்மை மற்றும் சூழ்நிலையைக் கருத்திற்கொண்டும் இம்மனு அனுமதிக்கத்தக்கது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

9. முடிவாக இம்மனு அனுமதிக்கப்பட்டு உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்துத் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் படித்துப் பார்த்து பிழைநீக்கம் செய்யப்பட்டு, இத்திறந்த நீதிமன்றத்தில் இன்று 16.11.2023 தேதி அவையறியப் பகரப்பட்டது.

V RAMALINGAM Digitally signed by V RAMALINGAM Date: 2023.11.16 17:40:29 +0530

சார்பு நீதிபதி,
அருப்புக்கோட்டை.

<u>மனுதாரர்தரப்பு சாட்சிகள், சான்றவாணங்கள் :_</u> இல்லை
<u>எதிர்மனுதாரர்தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள்:–</u> இல்லை

V RAMALINGAM Digitally signed by V RAMALINGAM Date: 2023.11.16 17:40:38 +0530

சார்பு நீதிபதி,
அருப்புக்கோட்டை.

சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை
வ.வி.எண்.4/23 இன்
அ.வ.எண்.57/2018
உத்தரவு நாள் – 16.11.2023